**சார்பு நீதிமன்றம், போளூர்**

அசல் வழக்கு எண்: 66/ 2022

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் நாள் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.K.மணிமொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.வெங்கடேசன் | தொழில் | |
| தந்தை பெயர் | ராஜாமணி | வட்டம் | |
| கிராமம் | | சமயம் | |
| சாதி | | வயது | |

**முதல் விசாரணை: வா.சா.1**

நான் படவேடு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 23.09.2010 தேதியன்று 1ம் பிரதிவாதிக்கு மல்லிகா அம்மாள் வகையறாகள் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரன் அசல் **வா.சா.ஆ.1**. நானும் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரும் 30.01.2019 தேதியன்று தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திக்கொண்ட பதிவு கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அசல் **வா.சா.அ.2**. 1ம் பிரதிவாதிக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.3**. மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றக்கொள்ளாமல் திருப்பப்பட்ட பதிவு தபால் உரை **வா.சா.ஆ.4**. 01.07.2020 தேதியிட்டு 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.5**. மேற்படி அறிவிப்பை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக கணினி நகல் **வா.சா.ஆ.6**. தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sub Judge, Polur